# மேட்டுப்பாளையம் நகராட்சி

31 .12.2019ம் தேதி செவ்வாய்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ள
மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

## கூட்டப் பொருள்

<table>
<tr><td>1.</td><td>இந்நகராட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டப்பணிகள் விபரத்தினை மாலை தமிழகம் பத்திரிக்கையில் 13.11.2019 ஆம் தேதியில் விளம்பரம் செய்யப்பட்டது. விளம்பரம் செய்யப்பட்டதற்கான விளம்பரம் கட்டணம் தொகை ரூ. 14700/—ஐ வழங்குமாறு Bill No MT – 2139/2019—2020, நாள். 14.11.2019 வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்படி தொகையினை மாலை தமிழகம் பத்திரிக்கைக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.4008/2017/இ2</td></tr>
<tr><td>2.</td><td>மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் இரண்டு மின்மாற்றிகள் ( Transformer – 500 KVA) மாறி மாறி இயக்கப்படுகின்றன அதில் Unit No :1 கடந்த மாதம் பெய்த மழையால் இயங்கிக் கொண்டிருந்தபோது H.T Fuse போய்விட்டது. பின்னர் அதை நிறுத்திவிட்டு Unit No .2 இயக்கப்பட்டு வருகிறது. Unit No .1 மின்மாற்றியை ஆய்வு செய்த போது மின்மாற்றியின் உட்புறம் உள்ள காயில்கள் பழுதாகி (Insulator) பீங்கான்கள் பழுதாகியிருந்தது தெரியவந்தது. மேலும் Transformer Oil குறைவாகவும் உள்ளதால் மேற்படி மின்மாற்றியை காயில் சரி செய்யவும், புதிதாக ஆயில் மற்றும் Insulator அதனுடன் சார்ந்த உபகரணங்கள் வாங்கி மாற்றுவதற்கு ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.3,50,000/—க்கு மன்றப் பொருள் ஆணையரின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.4331/2019/இ2</td></tr>
<tr><td>3</td><td>இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் டி.என்.40—3711 தகுதிச்சான்றுதழ் பெற வேண்டி பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு 10.12.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.<br><br><table><tr><td>வ. எண்.</td><td>ஒப்பந்த்தாரர் பெயர்</td><td>ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ..</td></tr><tr><td>1.</td><td>திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டர் ஓர்க்ஸ், ஈரோடு</td><td>1,18,650/—</td></tr><tr><td>2</td><td>திருவாளர் முருகன் ஆட்டோஸ், ஈரோடு</td><td>1,21,500/—</td></tr></table><br>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டர் ஓர்க்ஸ் ஈரோடு. அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.1626/2019/எச்1</td></tr>
<tr><td>4</td><td>இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் டி.என்.40C — 0551 பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு 10.12.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.<br><br><table><tr><td>வ. எண்.</td><td>ஒப்பந்த்தாரர் பெயர்</td><td>ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ..</td></tr><tr><td>1.</td><td>திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டர் ஓர்க்ஸ், ஈரோடு</td><td>1,43,000/—</td></tr><tr><td>2</td><td>திருவாளர் முருகன் ஆட்டோஸ், ஈரோடு</td><td>1,72,000/—</td></tr></table><br>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டர் ஓர்க்ஸ் ஈரோடு. அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.1506/2019/எச்1</td></tr>
</table>

5 மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 29ல் நடுர் பகுதியில் கண்ணப்பன் லே–அவுட் AD Colony பகுதியில் உள்ள 4(நான்கு) வீடுகள் 01.12.2019 பெய்த கன மழையில், அருகில் இருந்த சுற்றுச் சுவர் இடிந்து விழுந்த சேதமடைந்தன. இதனால் வீடுகளில் இருந்த 17 நபர்கள் இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தனர். இவ்விபத்து நகராட்சி பகுதியில் நடைபெற்றதாலும் மேலும் ஒரே நாளில் 180mm மழை பதிவாகி பேரிடர் காலம் என்பதாலும் மாவட்ட ஆட்சியர் கோவை அவர்கள் நகராட்சியினை பேரிடர் மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ளும்படி உத்திரவிட்டதாலும் இவ்விடுபாடுகளை JCB, டிப்பர் மற்றும் டிராக்டர் போன்ற வாகனங்களை கொண்டு நீக்க உத்திரவிட்டதன் அடிப்படையில் வாகனங்களை வாடகை அடிப்படையில் இயக்க மற்றும் மாண்புமிகு முதலமைச்சர், நகராட்சி நிர்வாகம் மற்றும் சிறப்புத் திட்டம் செயலாக்க துறை அமைச்சர் இவ்விடத்தை பார்வையிட வருகை தருவதை அடுத்தும் சாலைகள் மீட்பு பணி மேற்கொள்ள ஏதுவாக சாலைகளை சீரமைக்க வேண்டியுள்ளது. மேலும் அருகில் உள்ள ஓடைகளில் அதிகஅளவில் தண்ணீர் வரத்து உள்ளதாலும் மேலும் வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்து ஆபத்து நேரிடும் அபாயம் உள்ளதாலும் அருகில் உள்ள ஓடைகளை Hitachi வாகனத்தைக் கொண்டு சுத்தம் செய்ய வேண்டியுள்ளது. இப்பணிக்கு தோராயமாக ரூ. 3.50 இட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இப்பணியினை நகராட்சி விதி எண். 1920–15ன் கீழ் பணிகளை மேற்கொண்டதில் ரூ.3,49,541/– செலவீடு செய்யப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்
ந.க.எண் .1643/2018/இ1

6. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் டி.என்.40M – 9703 பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு 10.12.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | ஒப்பந்த்தாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. |
|---|---|---|
| 1. | திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டர் ஓர்க்ஸ், ஈரோடு | 28,700/- |
| 2 | திருவாளர் முருகன் ஆட்டோஸ், ஈரோடு | 32,000/- |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டர் ஓர்க்ஸ் ஈரோடு. அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.3094/2019/எச்1

7. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் டி.என்.40B – 1483, டி.என்.40 – 0986, டி.என்.40 – 2273, பேட்டரி விநியோகம் செய்வதற்கு 10.12.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | ஒப்பந்த்தாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. |
|---|---|---|
| 1. | திருவாளர் ரமேஷ் ஏஜென்சிஸ், மேட்டுப்பாளையம் | 27,000/- |
| 2 | திருவாளர் ரிசப் என்டர்பிரைசஸ் | 27,800/- |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர் ரமேஷ் ஏஜென்சிஸ், மேட்டுப்பாளையம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.515/2019/எச்1

| | |
|---|---|
| 8. | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் டி.என்.40 – 0986 சில பழுது பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இப்பழுது பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.65,000/-த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.4154/2019/எச்1 |
| 9. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டத்தின் 10 SHPC ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் Roc No 29426-4/p3 / 2019 தேதி 06.12.2019ல் பணி மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்படுகிறது.<br><br>வ. எண் \| பணியின் பெயர் \| மதிப்பீடு ரூ இலட்சத்தில்<br>1 \| 10 TPD Incineration Plant அமைத்தல் பணி \| 100.00<br><br>மேற்காணும் பணிக்கு மொத்த மதிப்பீடு ரூ. 100.00 இலட்சத்தில்<br><br>மத்திய அரசு மானியம் – 35%<br><br>மாநில அரசு மானியம் – 55%<br><br>நகராட்சி பங்களிப்பு தொகை ரூ. 10% என நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை அடுத்து மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:**<br>1.அனுமதி வழங்கலாம்<br>2. நகராட்சி பங்குத் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம் |
| 10. | மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் மூன்று குடிநீர்த்திட்டங்களிலும் ஆற்று நீரை (Raw Water) நீரேற்றம் செய்து. வடிதளங்கள் மூலம் சுத்தம் செய்யப்பட்டு , மேல்நிலைத் தொட்டிகளில் நிரப்பப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மூன்று திட்டங்களிலும் ஆற்றில் தண்ணீரின் அழுக்கினை நீக்கவும் (Turbidity) தண்ணீரை தெளியவைக்கவும், செந்நீரை மாற்றவும் படிகாரம் (Alum) பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது கையிருப்பில் குறைவாக இருப்பதாலும் இனிவரும் காலங்களில் கூடுதலாக தேவைப்படுவதாலும் 20டன் படிகாரம் வாங்க (Twad Board Schedule of rate) தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரியம் விலைப்பட்டியல் படி உத்தேச செலவினம் 2,30,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** அனுமதிக்கலாம்<br><br>பொதுமக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கும் பொருட்டு, தண்ணீரை சுத்தம் செய்ய படிகாரம் (Sulphate of Alumina Ferric) வாங்கும் ஆகும் செலவினம் ரூ. 2,30,000/–க்கு குடிநீர் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**ந.க.எண். 000113/2019/இ2** |
| 11. | இந்நகராட்சி பொதுச் சுகாதாரப் பிரிவிக்கு தேவையான தளவாடப்பொருட்கள் மற்றும் சுண்ணாம்பு , பிளீச்சிங் பவுடர், பெனாயில் போன்ற பொருட்கள் தூய்மைப்பணி மேற்கொள்ள தேவைப்படுவதால் அதனை பெறுவதற்கான தோராய செலவினம் ரூ.7.0 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.4317/2019/எச்1 |

12. மேட்டுப்பாளையம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் கீழ்க்காணும் பணிகளுக்கு 17.12.2019 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியல் கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 4 சங்கர் நகர் பகுதியில் உள்ள பொதுக்கழிப்பிடத்தில் மராமத்து பணிகள் மற்றும் தண்ணீர் வசதி செய்தல் | 3.30 | ஸ்ரீ. ஆஸ்க் சுஷ்மா இன்பராஸ்ரக்சர்ஸ் | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | ஜி.கே.எஸ்.சேதுபதி | 1.86% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2 | வார்டு எண். 29 நடூர் பகுதியில் உள்ள பொதுக்கழிப்பிடத்தில் மராமத்து பணிகள் செய்தல் | 2.60 | ஸ்ரீ. ஆஸ்க் சுஷ்மா இன்பராஸ்ரக்சர்ஸ் | 2.26% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | ஜி.கே.எஸ்.சேதுபதி | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |

மேற்காணும் பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண். 1643/2013/இ1

13. மேட்டுப்பாளையம் நகராட்சி வார்டு எண் 24. கெண்டையூர் கருவலூர் மாரியம்மன் கோவிலுக்கு புதிதாக குடிநீர் இணைப்பு வழங்கக் கேட்டு கோவில் கமிட்டி நிர்வாகத்தினர் மனு அளித்துள்ளனர். மேற்கண்ட கோவிலுக்கு சொத்துவரி கிடையாது . எனவே, கெண்டையூர் கருவலூர் மாரியம்மன் கோவிலுக்கு புதிய குடிநீர் இணைப்பு (வணிக முறை) வழங்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்
ந.க.எண். 4429/2019/அ5

14. இந்நகராட்சி பயன்பாட்டில் உள்ள TN40C 7087 ஈப்பில் உள்ள பழுதுகளை கோவை CAI என்ற பணி மனையில் நகராட்சிகள் சட்டம் 1920 (பிரிவு 15)ன் கீழ் ரூ.126163/– செலவில் பணி மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்
ந.க.எண். 4306/2019/இ1

15. மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9ல் வசித்து வரும் திருமதி. கோமதி என்பவர் சொத்துவரி பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 145/2019ல் நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கினை இந்நகராட்சிக்கு சார்பாக நகராட்சி வழக்கறிஞர் திரு. வி. செந்தில்குமார் வசம் கோப்பு ஒப்படைப்பு செய்து எதிர் வழக்காடவும் இவ்வழக்கிற்கு ஆகும் உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின்அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்
ந.க.எண்.4517/2019/அ2

16 மேட்டுப்பாளையம் நகராட்சியில் வார்டு எண். 20ல் நகரவை பெண்கள் மேல்நிலைப்பள்ளி உள்ளது. இப்பள்ளியில் சுமார் 1000 மாணவிகள் பயின்று வருகிறார்கள். இப்பள்ளியில் அதிக அளவில் பெண் குழந்தைகள் உள்ளதால் கூடுதல் கழிப்பறைகள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி கழிப்பறைகளுக்கு தண்ணீர் வசதி ஏற்படுத்தும் பொருட்டு இப்பள்ளிக்கு ஒரு ஆழ்துளை கிணறு அமைப்பதற்கு ரூ. 3.30 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உள்ளது. இப்பணியினை கல்வி நிதியில் மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இப்பணியின் அவசரம் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி முன் நடவடிக்கை தொடர மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| 17. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட சத்தியமூர்த்தி நகரில் மாதேஸ்வரன் கோவில் அருகில் சமுதாய கூடத்தின் அருகில் செயல்பட்டு வந்த நகராட்சியின் கட்டணக் கழிப்பிடம் மிகவும் பழுதடைந்து பொது மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது என்று அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். மேற்கண்ட கழிப்பிடத்தை மராமத்து பணிகள் மற்றும் தண்ணீர் வசதி, மின்வசதி மேலும் செப்டிக் டேங்க் சுத்தம் செய்யவும் பணிகள் ஆகிய பணிகளை மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரூ. 2.70இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மேலும் இப்பணியினை நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். |
| 18. | மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.32 மண்டேலா நகர் பகுதியில் உள்ள பொது கழிப்பிடம் செப்டிக் டேங் பழுதடைந்து கழிவுநீர் செல்ல வழியில்லாமல் கழிப்பிடம் பயன்படுத்த முடியாமல் உள்ளது என்றும் அவற்றை சரி செய்து கொடுக்க அப்பகுதி மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். மேற்கண்ட கழிப்பிடத்திற்கு புதியதாக செப்டிக்டேங் அமைக்கவும் மேலும் மராமத்து பணிகள் மேற்கொள்ளவும் ரூ. 1.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மேலும் இப்பணியினை நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். |
| 19. | மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட நெல்லித்துறை சாலையில் உப்புப்பள்ளம் செல்லும் வழியில் உள்ள பொது கழிப்பிடம் பொது மக்கள் பயன்படுத்த முடியாமல் பழுதடைந்து உள்ளதாக தெரிவித்துள்ளனர். மேற்கண்ட கழிப்பிடத்திற்கு மராமத்து பணி, தண்ணீர் வசதி, மின்வசதி ஆகிய பணிகள் மேற்கொள்ள ரூ. 2.80 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மேலும் இப்பணியினை நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். |
| 20 | இந்நகராட்சியில் சேகரிப்படும் சுமார் 4.5MT எடையுள்ள கலவைக் கழிவுகள் (Mixed Waste) நகராட்சி உரத்திடலில் கொண்டு சென்று கொட்டப்பட்டு வருகின்றது. கழிவுகளை கொட்டுவதற்கு Bio – Mining செய்த இடம் தவிர்த்து சுமார் 1.5 ஏக்கர் நிலப்பரப்பு மட்டுமே உள்ளது. இதில் மேற்கூறிய இடத்தில் கழிவுகள் கொட்டப்பட்டு வருவதால் உடனுக்குடன் நிரம்பி மேலும் கழிவுகளைக் கொட்ட இடம் இல்லாத சூழ்நிலை உள்ளது. எனவே, மேற்படி கழிவுகளை அகற்ற HITACHI (CHAIN DOZER) வாகனம் மூலம் தூய்மை செய்திடம் அதற்கான தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு ஆணையரின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.4661/2019/எச்1 |
| 21 | இந்நகராட்சி பொதுச் சுகாதாரப் பிரிவில் குப்பைகளை தரம் பிரித்து சேகரிக்க தள்ளுவண்டிகள் மற்றும் BOV பயன்படுத்தப்படும் குப்பை தொட்டிகள் நீலநிற பெட்டிகள் 100Nos, பச்சை நிற பெட்டிகள் – 100Nos பெறுவதற்கான தோராய செலவினம் ரூ, 4.0 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.4321/2019/எச்1 |
| 22 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் வார்டு எண் 32 மணிநகர் பகுதியில் உள்ள நகராட்சி உயர்நிலைப்பள்ளி கட்டிடத்தின் எதிரில் உள்ள பழுதடைந்து இடிந்த கட்டிடத்தினை முழுவதுமாக இடித்து கொடுக்குமாறு அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும் அப்பள்ளியில் குழந்தைகளின் பாதுகாப்பு நலன் கருதி பழுதடைந்த கட்டிடத்தை முழுவதுமாக இடிக்க மாவட்ட ஆட்சியர் கோவை அவர்கள் அறிவுரை வழங்கியதன் அடிப்படையில் மேற்படி கட்டிடத்தை இடிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம் |
| 23 | நகராட்சிக்கு சொந்தமான நகரவை பெண்கள் மேல் நிலைப்பள்ளியில் பயன்பாடற்ற பழுதடைந்த கட்டிடத்தை இடிக்க நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியர் திருப்பூர் அவர்களால் தொழில் நுட்ப அனுமதி வழங்கியுள்ளதை அடுத்து இக்கட்டிடத்தை இடிக்க ஆகும் செலவு ரூ. 1.70 இலட்சத்தினை கல்விநிதியில் மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2508/2017/இ1 |

| | |
|---|---|
| 24 | இந்நகராட்சி பயன்பாட்டில் உள்ள Scorpio வாகனத்தில் உள்ள பழுதுகளை (ஆயில் சர்விஸ்) ரூ.7400/– செலவில் CAI என்ற பணி மனையில் நகராட்சிகள் சட்டம் 1920 (பிரிவு 15)ன் கீழ் பணி மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 4326/2019/இ1 |